TNKR080000742019

**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : – திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ., பி.எல்.,**

**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாய நீதிபதி, குளித்தலை.**

**2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10–ஆம் தேதி செவ்வாய்க்கிழமை**

**MCOP No.22/2019**

(CNR No.TNKR08-000074-2019)

ராஜேஸ்வரி ... மனுதாரர்

/எதிர்/

The Managing Director,
Tamilnadu State Transport, Madurai. ... எதிர்மனுதாரர்

இம்மனு கடந்த 26.02.2026–ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.B.மீனாட்சி சுந்தரம், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.ஹபீப் ரஹ்மான், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ...

**உத்தரவு**

மனுதாரரால் மோட்டார் வாகன சட்டப்பிரிவு 140 மற்றும் 166–ன் கீழ் இழப்பீடாக ரூ.30,00,000/– கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில், மனுதாரர் குளத்தூர், வரவணை கிராமம், கடவூர் வட்டம், கரூர் மாவட்டம் என்கின்ற முகவரியில் குடியிருந்து வருவதாகவும், எதிர்மனுதாரர் பெரியார் பேருந்து நிலையம், மதுரை மெயின், மதுரை என்கின்ற முகவரியில் அலுவலகம் வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**2)** கடந்த 02.11.2017-ம் தேதி அன்று மனுதாரர் மற்றும் அவரது கணவர் TN 66 B 8463 என்ற பதிவெண் கொண்ட காரில் அமர்ந்து முத்து என்பவர் காரை ஓட்டிக்கொண்டு திண்டுக்கல் டூ ஒட்டன்சத்திரம் மெயின் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சாலையின் இடது ஓரமாக பயணம் சென்று கொண்டிருந்த போது, அதே ரோட்டில் மனுதாரர் சென்ற வாகனத்திற்கு பின்னால் வந்த எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு சொந்தமான TN 58 N 2235 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று மேற்படி மனுதாரர் சென்ற வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட, மேற்படி விபத்திற்காக திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் காவல் நிலையத்தில் குற்ற எண்.174/2017 இ.த.ச பிரிவுகள் 279, 337-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**3)** மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166(2)-ல் *"Every Application under sub-section (1) shall be made, at the option of claimant, either to the Claims Tribunal having jurisdiction over the area in which the accident occurred or to the Claims Tribunal within the local limits of whose jurisdiction the claimant resides or carries on business or with the local limits of whose jurisdiction the defendants resides, they shall be in such form and contain such particulars as may be prescribed"* என குறிப்பிடப்பட்டுள்ளது.

**4)** மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் மனுதாரர் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருப்பதாக கூறியிருப்பினும், அவ்வாறு மனுதாரர் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருந்து வருகிறார் என்பதற்காக ஆவணங்களை தாக்கல் செய்யுமாறும், மேற்படி இம்மனுவினை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை உள்ளதா? என்பது குறித்தும் மனுதாரரிடம் வினா எழுப்ப, மனுதாரர் தரப்பில், மனுதாரர் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருப்பதற்கான ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என கடந்த 26.02.2026-ம் தேதி அன்று குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார். அவ்விதத்தில், ***"The Hon'ble Madurai Bench of Madras High Court in Royal Sundaram Alliance Insurance***

***Co.Ltd Vs Manoj Kumar and Ayyappan dated 28.11.2016 in Tr.CMP(MD) Nos.482 to 485 of 2016*** *held as follows:- "It is needless to state that minimum rule which followed by the Tribunals / Courts, while scrutinizing applications is that the residential proof has to be verified, by asking the claimants to produce the original documents, regarding their permanent residential addresses, through the recognized Government Identity Cards. In the absence of any such proof for residence, the MCOP applications need not be numbered. A person who is not having any such documents, in the case, where there is no government Identity Cards, at least, a sworn affidavit is required the residential address"* என கூறப்பட்டுள்ளது. மேற்படி முன்தீர்ப்பானது இம்மனுவின் தன்மைக்கும், பொருண்மைக்கும் பொருந்துவதாக உள்ளது.

5) மனுதாரர் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருக்கவில்லை என்பதால், எதிர்மனுதாரரின் நிறுவனம் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் இல்லை என்பதாலும், மேற்படி மனுவினை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை இல்லை என முடிவு செய்யப்படுகிறது.

6) **முடிவாக,**

**(அ)** மனுதாரரின் மனுவானது திருப்பப்படுகிறது. (Return)

**(ஆ)** மனுதாரர், உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் உரிய நீதிமன்றத்தில் இந்த மனுவினை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.10 17:19:11 +0530

தீர்ப்பாய நீதிபதி,
குளித்தலை.